**போக்குவரத்து அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2010**

இந்த அறிக்கை இரண்டு பகுதிகளை உள்ளடக்கியுள்ளது.

I ஆம் பகுதி - அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை

II ஆம் பகுதி - ஒவ்வொரு ஒதுக்கீட்டுத் தலைப்புக்குமான விபரமான அறிக்கை

## I ஆம் பகுதி

**போக்குவரத்து அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் மீதான சுருக்கமான அறிக்கை**

### 1. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்

| செலவுத் தலைப்பு | திணைக்களத்தின் பெயர் |
|---|---|
| 306 | இலங்கை புகையிரதத் திணைக்களம் |
| 307 | மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் |

### 2. வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

அமைச்சின் கீழுள்ள 2 திணைக்களங்களினால் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் கணக்காண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அமைச்சினால் வருடாந்தசெயல் நடவடிக்கைத் திட்டம் வருடம் முடிவடைந்த பின்னரயே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 3. கணக்குகள்

#### 3.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**(அ) கணக்குகளைச் சமர்ப்பித்தல்**

அமைச்சினால் ஒதுக்கீட்டுக் கணக்குகள் 2011 மார்ச் 31 ஆந் திகதியளவில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. இரண்டு திணைக்களங்களிற்குரிய ஒதுக்கீட்டுக் கணக்குகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த திகதிகள் கீழ்மே காட்டப்பட்டுள்ளன.

| அமைச்சு/திணைக்களம் | ஒதுக்கீட்டுத் தலைப்பு | சமர்ப்பிக்கப்பட்ட திகதி |
|---|---|---|
| புகையிரதத் திணைக்களம் | 306 | 2011 ஜுன் 17 |
| மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் | 307 | 2011 ஜுன் 17 |

**(ஆ) மொத்த ஏற்பாடும் செலவும்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 02 திணைக்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 35,149,744,000 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை இதில் ரூபா 26,404,278,840 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க அமைச்சு மற்றும் திணைக்களங்களின் நிதி ஏற்பாடுகளிலிருந்தான தேறிய சேமிப்புக்கள் ரூபா 428,121,967 இற்கும் ரூபா 7,680,815,205 இற்கும் இடைப்பட்ட வீச்சில் பல்வேறு அளவில் அல்லது மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் 1.2 சதவீத்திற்கும் 21.8 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டன. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| ஒதுக்கீட்டுத் தலைப்பு | அமைச்சு/ திணைக்களம் | தேறிய நிதியேற்பாடு | | பயன்பாடு | | சேமிப்பு | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மீண்டு வருபவை | மூலதனம் | மீண்டு வருபவை | மூலதனம் | மீண்டு வருபவை | மூலதனம் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 114 | போக்குவரத்து | 4,328,100,000 | 1,901,590,000 | 4,314,853,965 | 1,278,308,047 | 13,246,035 | 623,281,953 |
| 306 | புகையிரதம் | 7,285,750,000 | 19,750,600,000 | 7,191,352,333 | 12,164,182,462 | 94,397,667 | 7,586,417,538 |
| 307 | மோட்டார் வாகனப் போக்குவரத்து | 773,154,000 | 1,110,550,000 | 716,620,372 | 738,961,661 | 56,533,628 | 371,588,339 |
| | மொத்தம் | 12,387,004,000 | 22,762,740,000 | 12,222,826,670 | 14,181,452,170 | 164,177,330 | 8,581,287,830 |

## 3.2 வருமானக் கணக்கு

### (அ) கணக்குகளைச் சமர்ப்பித்தல்

அமைச்சின் கீழுள்ள 02 திணைக்களங்களினால் 2010 ஆம் ஆண்டிற்கான 04 வருமான தலைப்புக்களிற்காக தயாரிக்கப்பட வேண்டியிருந்த வருமானக் கணக்குகளின் எண்ணிக்கை 04 ஆகக் காணப்பட்டதுடன் 2011 மார்ச் 31 ஆந் திகதியளவில் அவை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| திணைக்களம் | வருமானக் குறியீடு | விபரம் |
|---|---|---|
| இலங்கை புகையிரதத் திணைக்களம் | 20:01:10:00 | **வருமானக் கணக்கு** |
| மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் | 20:03:02:14 | மோட்டார் வாகனப் போக்குவரத்து அதிகாரச்சட்டத்தின் கீழ் அறவிடப்பட்ட கட்டணங்கள் மற்றும் ஏனைய பெறுவனவுகள் |
| மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் | 10:03:07:04 | மோட்டார் வாகன விற்பனைகள் மீதான வரி |
| மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் | 10:03:01:00 | சொகுசு மோட்டார் வாகன வரி |

### (ஆ) மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்

அமைச்சின் கீழுள்ள இரண்டு திணைக்களங்களினால் 2010 ஆம் ஆண்டில் 04 வருமான குறியீடுகளிற்காக ரூபா 7,188.27 மில்லியன் வருமானமொன்று மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 7,877.09 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் 94 சதவீதத்திற்கும் 124 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் வருமானங்கள் சேகரித்துக் கொள்ளப்பட்டிருந்தன. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் | வருமானக் குறியீடு | மதிப்பிடப்பட்ட | உள்ளபடியான | மிகைச் சேகரிப்பு (குறைச் சேகரிப்பு) | சதவீதம் |
|---|---|---|---|---|---|

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | % |
| புகையிரத பொது முகாமையாளர் | 20:01:10:00 | 4,040,000,000 | 4,018,035,371 | (21,964,629) | 99 |
| மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் | 20:03:02:14 | 2,800,267,000 | 3,485,832,206 | 685,565,206 | 124 |
| மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் | 10:03:07:04 | 38,000,000 | 35,976,313 | (2,023,687) | 94 |
| மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் | 10:03:01:00 | 310,000,000 | 337,251,325 | 27,251,325 | 108 |
| மொத்தம் | | 7,188,267,000 | 7,877,095,215 | (688,828,215) | |

### 3.3 முற்பணக் கணக்குகள்

### 3.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

#### (அ) கணக்குகளைச் சமர்ப்பித்தல்

அமைச்சினால் மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட வேண்டிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான 01 முற்பணங்கள் கணக்கு 2011 மார்ச் 31 ஆந் திகதியளவில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் பின்வரும் 02 முற்பணக் கணக்குகள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| திணைக்களம் | விடய இலக்கம் |
|---|---|
| இலங்கை புகையிரதத் திணைக்களம் | 30601 |
| மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் | 30701 |

#### (ஆ) எல்லைகளைப் பின்பற்றல்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள இரண்டு திணைக்களகங்களிற்காக அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் பின்பற்றப்பட்டிருந்தன.

### 3.3.2 களஞ்சிய முற்பணக் கணக்குகள்

#### (அ) கணக்குகளைச் சமர்ப்பித்தல்

அமைச்சின் கீழுள்ள 01 திணைக்களத்தினால் மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட வேண்டிய 01 களஞ்சிய முற்பணங்கள் கணக்கு 2011 மார்ச் 31 ஆந் திகதியளவில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| திணைக்களம் | விடய இலக்கம் | முற்பணக் கணக்கு நடவடிக்கை | கணக்கினை சமர்ப்பித்த திகதி |
|---|---|---|---|
| இலங்கை புகையிரதத் திணைக்களம் | 30602 | களஞ்சியம் | 2011 மே 11 |

#### (ஆ) எல்லைகளைப் பின்பற்றல்

அமைச்சின் கீழுள்ள 01 திணைக்களத்தின் 01 களஞ்சிய முற்பணக் கணக்கு நடவடிக்கைகளிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த பின்வரும் எல்லைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

| அமைச்சு/ திணைக்களம் | விடய இல. | அதிகூடிய செலவின எல்லை | உள்ளபடியானவை | அதிகூடிய வரவு மீதி எல்லை | உள்ளபடியானவை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| புகையிரதத் திணைக்களம் | 30602 | 1,300,000,000 | 1,497,442,395 | 4,067,000,000 | 4,136,142,680 |

## 3.4 கட்டுநிதி மற்றும் பொதுவைப்புக் கணக்குகள்

### 3.4.1 கட்டுநிதிக் கணக்கு

அமைச்சில் 2010 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் கட்டுநிதிக் கணக்குகளில் ரூபா 5,756,240,798 வரவு மிதியொன்று காணப்பட்டதுடன் அது தொடர்பான காலப்பகுப்பாய்வொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4.2 பொதுவைப்புக் கணக்கு

2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 01 திணைக்களத்தின் பொதுவைப்புக் கணக்குகளிலுள்ள மீதிகள் ரூபா 637,618,807

| | | |
|---|---|---|
| 01 வாகனம் | இளைஞர் விவகார அமைச்சு | தொடக்க பெறுமதி அல்லது மதிப்பிடப்பட்ட பெறுமதி வழங்கப்படவில்லை |
| 01 வாகனம் | முன்னாள் போக்குவரத்து அமைச்சர் | |
| 03 வாகனம் | இலங்கை புகையிரதத் திணைக்களம் | |
| 01 வாகனம் | இலங்கை ஜெர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம் | |

**(இ) ஏனைய நிறுவனங்களிற்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற விதத்தில் கையாளல்**

ஏனைய நிறுவனங்களிற்குச் சொந்தமான சில சொத்துக்கள் அமைச்சினால் முறையான அங்கீகாரமின்றி பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டன. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| சொத்து வகை | சொத்து உரித்தாக காணப்பட்ட நிறுவனம் | எண்ணிக்கை, அலகுகள் அல்லது அளவு | பெறுமதி | காலப்பகுதி |
|---|---|---|---|---|
| | | | ரூபா | |
| (i) காணிகள்<br>(ii) கட்டிடங்கள் | இலங்கை புகையிரதத் திணைக்களம் | 01 ஏக்கர் 25.75 பேர்ச். | 6,600,000 | ஒப்படைக்கப்பட்ட திகதிகள் காணப்படவில்லை |

## 1.5 இணக்கமின்மைகள்

**(அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களிற்கான | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|

**தொடர்பு**

| | | |
|---|---|---|
| | **ரூபா** | |
| நிதிப் பிரமாணம் | | |
| நி.பி. 103(1) (அ) – (எ)<br>நி.பி. 104<br>நி.பி. 110 | | அமைச்சின் பொருட் களஞ்சியத்தில் இடம்பெற்றிருந்த களவு தொடர்பில் ஏற்பட்டிருந்த நட்டம் மீது நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| நி.பி. 751 | 343,842 | (i) களஞ்சியத்திற்குப் பெறப்பட்ட அனைத்துப் பெறுவனவுகள் மற்றும் விநியோகங்கள் உரிய முறையில் பதிவுசெய்யப்படுதல் வேண்டும் என நிதிப்பிரமாணத்தில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2009 ஜனவரி 01 தொடக்கம் 2009 திசெம்பர் 31 வரையான காலத்தில் களஞ்சியத் திற்குப் பெறப்பட்ட மற்றும் களஞ்சியத்திலிருந்து விநியோகிக்க ப்பட்ட பொருட்கள் தொடர்பிலான தகவல்களை அறிவிக்கும் வகையில் பதிவேடுகள் காணப்படாமையால் ரூபா 343,842 ஆன பொருட்கள் ஏடுகளில் பதியப்பட்டிருக்கவில்லை. |
| | 1,469,231 | (ii) 2010 ஜனவரி தொடக்கம் செப்தம்பர் 13 வரையான காலத்தில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,469,231 ஆன பொருள் பெறுவனவுகள் மற்றும் அவற்றின் விநியோகங்கள் தொடர்பில் பதிவேடுகளைப் பேணிவருதவற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| சுற்றறிக்கை ஏற்பாடுகள் | | |
| 2007 மே 11 ஆந் திகதிய 09/2007 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் (iii) ஆம் பிரிவு | | ஓய்வுபெற்றோரை மீண்டும் சேவையில் ஈடுபடுத்துவதற்கு 12 மாதங்கள் வரையான காலவரையறை சுற்றறிக்கையினால் விதிக்கப்பட்டிருந்த போதிலும் போக்குவரத்து அமைச்சின் 10 உத்தியோகத்தர்கள் 01 தொடக்கம் 06 வருடங்களாக வருடந்தோரும் சேவைக்கால நீடிப்புப் |

**2.2 கணக்குகள் மற்றும் இணக்க கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்த மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு. இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2.3 கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் இலங்கை புகையிரத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (ஏ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 2.4 இலிருந்து 2.16 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) கணக்குகளைச் சமர்ப்பித்தல்**

(i) திணைக்களத்தினால் 2011 மார்ச் 31 ஆந் திகதியளவில் பின்வரும் கணக்குகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

| தலைப்பு/வருமானக் குறியீடு/விடய இல. | கணக்கின் பெயர் |
|---|---|
| 306 | ஒதுக்கீட்டுக் கணக்கு |
| 20:01:10:00 | வரமானக் கணக்கு |
| 30601 | அரங்சாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணங்கள் கணக்கு |
| 30602 | களஞ்சிய முற்பணக் கணக்கு – வருடாந்த நிதிக்கூற்றுக்கள் |

(ii) பயணிகள் போக்குவரத்து வருமானம், பண்டங்கள் போக்குவரத்து வருமானம், நானாவித வருமானங்கள், நிலுவை வருமானம், புகையிரத அனுமதிப் பத்திரங்களிற்காக கிடைக்க வேண்டிய தொகைகள் போன்றவை மீதான விபரமான பட்டோலைகள் இன்மை காரணமாக ரூபா

10,028,475,729 மொத்த தொகைக்குரிய 6 கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

(iii) திணைக்களத்திற்கு மீளாய்வாண்டில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 27 கணக்காய்வு ஐய வினாக்களிற்கு மார்ச் 31 ஆந் திகதி வரைக்கும் பதிலளிக்கப்படாதிருந்ததுடன் அக் கணக்காய்வு ஐய வினாக்கள் தொடர்பில் கணிப்பிடக் கூடியதாகவிருந்த கொடுக்கல்வாங்களின் பெறுமதி ரூபா 387,694,093 ஆகும்.

**(ஆ) மிகைகள் மற்றும் எல்லைகளைப் பின்பற்றாமை**

**(i)** திணைக்களத்தின் களஞ்சிய முற்பணக் கொன்றின் நடவடிக்கைக்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த பின்வரும் எல்லைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

| விடய இல. | செலவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|
| | அதிகூடிய எல்லை | மிகைத்தல் | அதிகூடிய எல்லை | மிகைத்தல் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 30602 | 1,300,000,000 | 197,443,394 | 4,067,000,000 | 69,142,000 |

**(இ) பாதீட்டு முரண்**

(i) தலைப்பு 306 இன் கீழ் 11 செலவின விடயங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 3,329,000,000 தொகையான தேறிய நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 11 செலவு விடயங்களுக்கு கூடுதலாக ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது தேறிய நிதி ஏற்பாட்டின் 25% இற்கும் 99% இற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

**(ஈ) கட்டுநிதிக் கணக்கு**

திறைசேரியினால் மூலதன மற்றும் மீண்டெழும் செலவினத்திற்காக திணைக்களத்திற்கு கட்டுநிதி விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் கட்டுநிதி தொடர்பாக திணைக்களத்தினால் கட்டுநிதிக் கணக்கு பேணப்படவோ அல்லது கட்டுநிதி மீதி திறைசேரிப் புத்தகத்துடன் மாதாந்தம் கணக்கிணக்கம் செய்யப்படாதிருந்ததுடன் ஆண்டின் இறுதியில் கட்டுநிதிக் கணக்கில் காணப்பட்ட ரூபா 45,188,928 மீதி திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டமையினை உறுதிப்படுத்துவதற்கு சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) பொது வைப்புக் கணக்கு**

(i) நி.பி. 565(4) இன் பிரகாரம் ஒவ்வொரு நிதியாண்டிற்காகவும் வைப்புப் பேரேடொன்று திறக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் இக்

கணக்குகளிலிருந்து வைப்புக்களை மீளளிக்க வேண்டியேற்படுகையில் தொடர்ச்சியாக முன்னைய பேரேட்டினை திருப்பிப் பார்வையிட வேண்டிய நிலைமையினைத் தவிர்ப்பதற்கு ஒவ்வொரு விடயமாகவும் மீதியினையும் முன்னெடுத்து வருவதற்குப் பதிலாக வைப்புப் பேரேட்டின் ஒவ்வொரு கணக்கின் மீதியினையும் சமப்படுத்தி ஒவ்வொரு விடயத்தினையும் தனித்தனியாக புதிய பேரேட்டிற்கு கொண்டுவர வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நி.பி. 571(1) மற்றும் (3) இன் பிரகாரம் ஒவ்வொறு ஆண்டின் இறுதியிலும் காலம் கடந்த வைப்புக்கள் மீதான பட்டியலொன்று தயாரிக்கப்பட வேண்டும் என்றும் காலம் கடந்த வைப்புக்கள் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்படுதல் வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் ரூபா 103,480,440 பெறுமதியான வைப்புக்கள் தொடர்பில் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) வருமானக் கணக்குகள்**

(i) சமர்ப்பிக்கப்பட்ட ஒரு வருமானக் கணக்கின் படி ரூபா 1,066,775,217 வருமானம் நிலுவையாக காணப்பட்டதுடன் அந் நிலுவை வருமானம் 1 தொடக்கம் 3 ஆண்டுகளிற்கு இடைப்பட்ட காலப்பகுதிக்கு உரித்தானதாகும். அந் நிலுவை வருமானங்களை அறவிட்டுக் கொள்வதன் மீதான பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் இருந்தன.

(ii) நிதிப்பிரமாணம் 128(2) இன் பிரகாரம் நிலுவை வருமானம் மீதான அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) வருமான மதிப்பீடுகளைத் தயாரிக்கையில் யதார்த்த ரீதியான தொகைகளை பயன்படுத்தாது கற்பனை ரீதியான தொகைகளைப் பயன்படுத்தும் அடிப்படையில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது.

(iv) திணைக்களத்தின் புகையிர நிலையங்களில் உள்ள சிற்றுண்டிச் சாலைகளை வாடகைக்கு வழங்கியமையால் பெறவேண்டிய ரூபா 344,744 ஆன நிலுவை வருமானம் முறையான அங்கீகாரமின்றி புத்தகங்களிலிருந்து அகற்றப்பட்டிருந்தது.

(v) திணைக்களத்திற்குச் சொந்தமான புகையிரத நிலையங்களிலுள்ள கடைகளை வாடகைக்கு வழங்கியமையால் நிலுவை வாடகை வருமானமாக அறவிடப்பட வேண்டிய ரூபா 1,519,271 நிலுவை வருமானமும் அறவிடப்பட வேண்டியிருக்கையில் மேலே குறிப்பிட்டவாறு முறையான அங்கீகாரமின்றி புத்தகங்களிலிருந்து அகற்றப்பட்டிருந்தது.

(vi) புகையிரத நிலையங்களிலுள்ள பாற்சாலைகளை வாடகைக்கு வழங்கியமையால் 2010 திசெம்பர் 31 இல் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 846,000 வருமானமொன்று கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை.

**(எ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

(i) 30601 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா

78,358,534 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் அந் நிலுவையினை அறவிடுதல் மீதான பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் காணப்பட்டன.

(ii) 1994 ஆகஸ்ட் 10 ஆந் திகதிய 96 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் ரூபா 78,356,534 மீதிகளின் மொத்தத்திற்காக 11 ஆம் இலக்க பட்டோலைப் படிவத்திற்கமைய காலப்பகுப்பாய்வொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) அச் சுற்றறிக்கையின் 3.2. ஆம் பந்தியின் படி சேவைநிலைய இடமாற்றம் பெற்றுச் சென்ற மற்றும் கூட்டுத்தாபன சேவைக்கு நிரந்தரமாக விடுவிக்கப்பட்ட திகதிகளும் மாற்றம் செய்யப்பட்ட நிறவனங்களும் விடுவிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களும் குறிப்பிடப்பட வேண்டிய போதிலும் ரூபா 863,291 பெறுமதியான மீதிகள் தொடர்பில் அவ்வாறான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) மேற்படி சுற்றறிக்கையின் 3.3 ஆம் பந்தியின் படி மரணித்த அல்லது ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 17,091,634 பெறுமதியான மீதிகள் தொடர்பில் தொடர்புடைய தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(v) அச் சுற்றறிக்கையின் 3.2, 3.3, 3.4 மற்றும் 3.5 ஆம் பந்திகள் தொடர்பில் இறுதியாக கடன் தமவணைப்பணம் அறவிட்ட திகதி குறிப்பிடப்பட வேண்டியிருந்த போதிலும், அத் தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) 2004 ஒக்தொபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் 1.1.7 ஆம் பந்திக்கு முரணாக சேவைநிலைய இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து நீண்ட காலமாக அறவிடப்படாதுள்ள ரூபா 1,771,730 கடன் மீதியினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vii) சேவைநிலைய இடமாற்றம் பெற்றுச் சென்ற மூன்று உத்தியோகத்தர்களின் மீதிகள் தீர்வுசெய்யப்பட்டிருக்கையில் ரூபா 182,926 கடன் மீதியொன்று தீர்க்கப்படவில்லை என தவறாக இணக்கக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் இரண்டு உத்தியோகத்தர்களின் ரூபா 448,276 கடன் மீதியொன்றும் தவறான விபரங்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(viii) ஓய்வுபெற்ற/மரணித்த எட்டு உத்தியோகத்தர்களின் மீதிகள் தீர்வுசெய்யப்பட்டிருக்கையில் ரூபா 180,695 கடன் மீதியொன்று தீர்க்கப்படாதிருப்பதாக தவறாக இணக்கக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ix) தாபன விதிக்கோவையின் xxiv ஆம் அத்தியாயத்தின் 4.2, 4.3, 4.4 மற்றும் 4.5 ஆம் பந்திகளின் பிரகாரம் ஓய்வுபெற்ற மற்றும் மரணித்த உத்தியோகத்தர்களிடமிருந்து நீண்டகாலமாக அறவிடப்பட வேண்டியுள்ள ரூபா 42,439,515 மீதியினை அறவிட்டுக் கொள்வதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(x) தாபன விதிக்கோவையின் xxiv ஆம் அத்தியாயத்தின் 4.5 ஆம் பந்தியின் பிரகாரம் பதவி வறிதாக்கப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியுள்ள ரூபா 21,504,665 கடன் மீதியினை பிணையாளர்களிடமிருந்து அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

அதிகாரச்சட்டம்

வதுடன் 2008 ஜுன் 01 முதல் 2010 மார்ச் 31 வரையான காலத்தில் கொடுப்பனவு செய்யப்படு கையில் நிறுத்தி வைத்தல் வரியினைக் கழிக்க வேண்டாம் என உள்நாட்டு இறைவரி பிரதி ஆணையாளரினால் புகையிரத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த அறிவித்தலை தபால் திணைக்களத்திற்குச் சமர்ப்பித்தலில் ஏற்பட்டிருந்த தாமதம் காரணமாக ரூபா 1,806,409 வருமானமொன்று திணைக்களத்திற்கு இழப்பாகியிருந்தது.

**(ii) தாபன விதிக்கோவை**

--------------------------------

* XLVIII ஆம் அத்தியாயத்தின் முதலாம் பட்டோலை

இந்த அத்தியாயத்தின் முதலாம் பட்டோலையில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பில் 4 குற்றப்பத்திரிகைகள் வழங்கப்பட்டு அதற்காக தண்டனைகள் விதிக்கப்பட்டிருந்த புகையிரதப் பாதுகாப்புப் படை உத்தியோகத்தர் ஒருவரை பாதுகாப்புப் படை பரிசோதகர் (விசேட பாதுகாப்புப் பிரிவு) என்ற பதவியினை உருவாக்கி அதற்காக நியமிக்கப்பட்டிருந்தார்.

* VIII ஆம் அத்தியாயத்தின் 5.6 ஆம் பிரிவு

சேவைச்சுழற்சி அல்லது வேலைச்சுழற்சி அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள உத்தியோகத்தர்களிற்கு வாரத்திற்கு சேவையாற்ற வேண்டிய மணித்தியாலங்களிற்கு மேல் கடமையாற்றிய மணித்தியாலங்களை அடிப்படை யாகக் கொண்டே மேலதிகநேர வேலை கணிப்பிடப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக அநுராதபுரம் போக்குவரத்து அத்தியட்சகர் அலுவலகத்தின் 147 சாரதிகள், சாரதி உதவியாளர்கள் மற்றும் கட்டளை உத்தியோகத்தர்களிற்கு மீளாய்வாண்டில் 18672 மணித்தியாளங்களிற்காக ரூபா 2,032,812 மேலதிக நேரப்படியாக செலுத்தப்பட்டிருந்தது.

* VIII ஆம் அத்தியாயத்தின் 3.5 ஆம் பிரிவு

ஏதேனுமோர் திணைக்களத்தில் வாரம் முழுவதும் மேலதிகவேலை காணப்படுகையில் உள்ளக வேலைத்திட்டமொன்றை பிரயோகித்தோ அல்லது மேலதிக பதவியணியினை ஆட்சேர்ப்புச் செய்தோ மேலதிக நேரப் படி செலுத்துவதனைத் தவிப்பதற்கு முடியாத சந்தர்ப்பத்தில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் புகையிரதச் சாரதிகள், சாரதி உதவியாளர்கள் மற்றும் வாகன கட்டளையாளர்கள்

| | |
|---|---|
| | தொடர்பில் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| * II ஆம் அத்தியாயத்தின் 13.3 ஆம் பிரிவு | பதவியொன்றுக்கு முழுநேர உத்தியோகத்தர் ஒருவரின் சேவை தேவைப்படின் நிரந்தர நியமனம் தாமதிக்காது செய்யப்பட வேண்டிய போதிலும் 2002 ஆம் ஆண்டில் வெற்றிடமாகியிருந்த இரசாயண மற்றும் உலோக விஞ்ஞான பதவி வெற்றிடத்தினை நிரப்புவதற்கு 2011 ஆகஸ்ட் வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| * XLVII ஆம் அத்தியாயத்தின் 10 ஆம் பிரிவு | அரசாங்க உத்தியோகத்தர் ஒருவருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் நியமன அதிகாரியினால் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் குறித்த உத்தியோகத்தரை பதவியிலிருந்து இடைநிறுத்தம் செய்ய வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |

(iii) நிதிப்பிரமாணங்கள்

--------------------------------

| | |
|---|---|
| * நி.பி. 104, 105, 109, 110 | 2005 இலிருந்து 2008 ஆம் ஆண்டு வரை மேற்கொள்ளப்பட்டிருந்த பௌதீக இருப்பு மெய்மையாய்வுகளில் இனங்காணப்பட்டிருந்த ரூபா 19,613,547 ஆன இருப்பு மிகைகள் மற்றும் ரூபா 49,357,023 ஆன இருப்பு பற்றாக்குறைகள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| * நி.பி. 371(2)(ஈ) | ஏதேனுமோர் தேவைக்காக வழங்கப்படுகின்ற முற்பணங்கள் குறித்த பணி நிறைவேற்றப்பட்டவுடன் தீர்க்கப்பட வேண்டிய போதிலும் 2011 ஆகஸ்ட் வரை அவ்வாறு தீர்க்கப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் வருமாறு<br><br>* 1988 ஆம் ஆண்டு முதல் இதுவரை கணக்கு வைத்தல் கிளையனால் வழங்கப்பட்ட முற்பணங்கள் ரூபா 339,615 ஆகும்.<br><br>* 1989 – 2010 வரை வழங்கப்பட்டிருந்த புகையிரத நிலைய அவசர முற்பணங்கள் ரூபா 2,531,383 ஆகும்.<br><br>* மூலதனச் செலவு மற்றும் மீண்டெழும் |

செலவுகளிற்காக கொடுப்பனவுகள் கிளையினால் வழங்கப்பட்டிருந்த முற்பணங்கள் ரூபா 45,152,768 ஆகும்.

| | |
|---|---|
| * நி.பி. 493 | நியதிச்சட்டரீதியாக திணைக்கள தண்டப்பண நிதியமொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை. இருப்பினும் விடுமுறை பெற்றுக்கொள்ளாது வேலைக்கு சமூகமளிக்காதிருத்தல் அல்லது தாமதமாக சேவைக்கு வருகைதருதல் நிமித்தம் அறவிடப்படுகின்ற சகல தண்டப்பணங்களும் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்படுதல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருப்பினும் அவ்வாறு அறவிடப்பட்ட மீதியான ரூபா 10,570,098 தொகை அவ்வாறு அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. |

(ii) அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை

------------------------------

| | |
|---|---|
| 2007 மே 11 ஆந் திகதிய 09/2007 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை | நியமிக்கப்படுகின்ற திகதியில் 67 வயதினைப் பூர்த்திசெய்துள்ள எவரும் மீண்டும் அரசாங்க சேவையின் அங்கீகரித்த பதவியணியின் நிரந்தரப் பதவியொன்றிற்கு நியமிக்கப்படக்கூடாது எனக் குறிப்பிடப்பட்டிருப்பினும் அதற்கு முரணாக 2008 – 2010 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 08 புகையிரத சாரதிகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். |

## 2.6 செயற்திட்டங்களை செயற்படுத்துவதில் காணப்பட்ட நலிவுகள்

மீளாய்வாண்டில் அநேக மூலதனச் செயற்திட்டங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டில் 10 செலவின விடயங்களின் கீழ் ரூபா 3,526 மில்லியன் தொகையான நிதி ஏற்பாடு சேமிப்பாகியிருந்தது. புகையிர வீதி மோட்டார் வாகனங்களை கொள்வனவு செய்வதற்கான கேள்விகோரல் தொடர்பில் நீதிமன்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தமை, அதிவேக தொடரூந்துகளைக் கொள்வனவு செய்யும் செயற்திட்டத்திற்கான உடன்படிக்கையில் சீனாவுடன் கைச்சாத்திடுவதில் தாமதம் ஏற்பட்டிருந்தமை, மருதானைக்கும் வாத்துவைக்கும் இடையே 20 ஆண்டுகளிற்கும் மேற்பட்ட சமிக்கை முறைமையினை புனர்நிர்மாணம் செய்யும் செயற்திட்டத்தின் கொள்வனவு நடவடிக்கைகள் பூர்த்தியடையாமை, பெல்ஜியம் பாலச் செயற்திட்டத்தின் உடன்படிக்கை ஆவணங்கள் தயாரித்து முடிக்கப்பட்டிராமை, வடக்கு கிழக்கு புகையிர வீதி அபிவிருத்திச் செயற்திட்டத்தின் அளவை நடவடிக்கைகள் பூர்த்தியடையாமை மற்றும் உடன்படிக்கை ஆவணங்கள் தயாரித்து முடிக்கப்பட்டிராமை போன்ற காரணங்களால் செயற்திட்டங்களை செயற்படுத்தல் தடைப்பட்டிருந்தன. இதன் காரணமாக மீளாய்வாண்டிற்காக நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த ஏற்பாடுகளைப் பயன்படுத்த முடியாது போனமை காரணமாக புகையிரதச் சேவையின்

தரத்தினை முன்னேற்றுவதற்காக காணப்பட்ட வாய்ப்புக்கள் கைநழுவிப்போயிருந்தன. செயற்திட்டங்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செலவின விடயம் | விபரம் | தேறிய ஏற்பாடு | சேப்பின் சதவீதம் | சேமிப்பிற்கான காரணம் |
|---|---|---|---|---|
| | | ரூபா | | |
| 306-2-4-2101(11)17 | புதிய 13 அதிவேக தொடரூந்துகளைக் கொள்வனவு செய்தல் | 15,000,000 | 100% | சீனாவுடன் உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதில் தாமதம் ஏற்பட்டிருந்தமை |
| 306-2-4-2104(7)12 | பெல்ஜியம் பாலச் செயற்திட்டம் | 105,000,000 | 100% | அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும் உடன்படிக்கை ஆவணங்கள் தயாரித்து முடிக்கப்பட்டிராமை |
| (7) 17 | -மேற்படி- | 5,000,000 | | |
| 306-2-4-2105(30)17 | பலாலி காங்கேசன்துறை புகையிரத வீதியினை மீளமைத்தல் | 5,000,000 | 100% | அளவை நடவடிக்கைகள் பூர்த்தியடையாமை மற்றும் உடன்படிக்கை ஆவணங்கள் தயாரித்து முடிக்கப் பட்டிராமை |
| 306-2-4-2105(12) 12 | கிழக்கு புகையிர வீதி அபிவிருத்திச் செயற்திட்டம் | 1,000,000 | 100% | -மேற்படி- |
| 306-2-4-2105 27 (12) | ஓமந்தை பலாலி புகையிரத வீதியினை மீளமைத்தல் | 1,000,000,000 | 100% | -மேற்படி- |
| 306-2-4-2105 28 (12) | மதவச்சி மடு புகையிரத வீதியினை மீளமைத்தல் | 653,000,000 | 100% | -மேற்படி- |
| 306-2-4-2105 29 (12) | மடு தலைமன்னார் புகையிரத வீதியினை மீளமைத்தல் | 1,502,000,000 | 100% | -மேற்படி- |
| 306-2-4-2101(01) | புகையிரத வீதி இயந்திர உபகரணங்கள் வாகனங்களைக் கொள்வனவு செய்தல் | 75,000,000 | 100% | 2007 டிரக் மோட்டார் வாகனங்களை கொள்வனவு செய்தல் தொடர்பில் குறித்த கொள்வனவுதாரரினால் நிதிமன்றத்திற்கு சமர்ப்பித்திருந்த மேன்முறையீட்டிற்கு தீர்ப்பு கிடைக்காமை |

அந்த எல்லையினை மீறாதிருக்கும் வகையில் ஒரு கொள்வனவினை பல பகுதிகளாக மேற்கொண்டிருந்தமை காரணமாக மொத்தமாக கொள்வனவு செய்கையில் திணைக்களத்திற்கு பெற்றுக்கொள்ள முடியுமாக காணப்பட்ட பொருளாதார நலன்கள் இழப்பாகியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 2.10 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த ஒரு சில கொடுக்கல்வாங்கல்கள் முறையற்றுக் காணப்படடன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் வருமாறு.

(அ) கொள்வனவு வழிகாட்டல்களில் குறிப்பிடப்பட்ட நடைமுறைகளிலிருந்து விலகிச் செயற்படல்

* கொள்வனவு வழிகாட்டல்கள் கையேட்டின் 3.2.2(அ) பிரிவின் பிரகாரம் கொள்வனவு அறிவித்தலொன்று முடியுமான எல்லா சந்தர்ப்பங்களிலும் குறைந்தபட்சம் கூடிய விற்பனை கொண்ட தேசிய செய்திப்பத்திரிகை ஒன்றிலும் தேசிய கொள்வனவு முகவர் நிலையத்தின் இணையதளம் மற்றும் ஏனைய இணையதளங்களிலும் பிரசுரிக்கப்படுதல் வேண்டுமாயினும் புகையிரதத் திணைக்களத்திற்கு எசிட்லீன் உள்ளிட்ட பல்வேறு வகையான வாயுக்களைக் கொள்வனவு செய்கையில் அதற்கு முரணாக செயற்பட்டிருந்தது.
* கொள்வனவு வழிகாட்டல்கள் கையேட்டின் 8.12.1 ஆம் பந்தியின் பிரகாரம் ஒப்பந்த நிர்வாகம் மீதான கொள்வனவுப் பொறுப்புக்களை முறைப்படி நிறைவேற்றாமை காரணமாக பொருட்களிற்கு கட்டளையிட்ட பின்னர் களஞ்சியத்திற்கு பெற்றுக்கொள்வதில் காலதாமதம் நிலவுகின்றமை அவதானிக்கப்பட்டது.
* புகையிரதத் திணைக்களத்தினால் பலுகஸ்வெவ இற்கும் கந்தளைக்கும் இடைப்பட்ட புகையிரப் பாதையின் பராமரிப்பதற்காக கொங்ரீட் சிலிப்பர்களைக் கொள்வனவு செய்கையில் கொள்வனவு வழிகாட்டல்கள் கையேட்டின் 2.4, 2.5, 2.6 ஆம் பிரிவுகளில் விபரிக்கப்பட்டுள்ள கொள்வனவுப் பொறுப்புக்கள் மற்றும் செயற்பாடுகள் பின்பற்றப்படாதிருந்ததுடன் 4.2 ஆம் பிரிவிற்கு அமைய கொள்வனவுத் திட்டமிடலொன்று நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. மேலும் அக் கையேட்டின் 8.11 ஆம் பிரிவிற்கு அமைய சிலிப்பர் கட்டைகள் விநியோக ஒப்பந்தத்தினை நிறைவேற்றத் தவறிய விநியோகத்தர்களிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. புகையிரதத் திணைக்களத்தினால் M 4 ஆம் வகுப்பு புகையிர என்ஜின்களிற்காக உதிரிப்பாகங்களைக் கொள்வனவு செய்கையில் கொள்வனவு வழிகாட்டல்கள் கையேட்டின் 2.5.1(ஆ) (இ) மற்றும் 4.2.2 ஆம் பிரிவுகளின் பிரகாரம் கொள்வனவு நேர அட்டவணையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.
* கொள்வனவு வழிகாட்டல்கள் கையேட்டின் 3.1 மற்றும் 3.2 ஆம் பிரிவுகளின் பிரகாரம் சர்வதேசப் போட்டிமிக்க விலைமனுக் கோரல்களோ அல்லது தேசிய போட்டிமிக்க விலைமனுக் கோரல்களோ மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை

* கொள்வனவு வழிகாட்டல்கள் கையேட்டின் 7.4 ஆம் பிரிவின் பிரகாரம் கேள்விமனுக்களின் மதிப்பீடு முடிந்தளவு விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதற்காக 3 மாதங்கள் தொடக்கம் 1 வருடம் வரையான காலதாமதங்கள் அவதானிக்கப்பட்டன.
* கொள்வனவு வழிகாட்டல்கள் கையேட்டின் 7.12.4 ஆம் பிரிவின் பிரகாரம் ஏேவிதாரருடன் இணங்கப்பட்டிருந்த மற்றும் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் மற்றும் நிபந்தனைகள் சம்பந்தமாக புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

## 2.11 நட்டங்களும் சேதங்களும்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையில் பின்வரும் நட்டங்களும் சேதங்களும் ஏற்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

* புத்தளம் புகையிரத வீதியில் கொச்சிக்கடை, லுனவில மற்றும் முந்தல் புகையிரத வளவில் காணப்பட்ட தரிப்பிடங்களை விநியோகிக்கையில் திணைக்களத்தின் பல்வேறு மட்டங்களிலும் உள்ள உத்தியோகத்தர்களின் பொறுப்புக்கள் சரிவர நிறைவேற்றப்படாமை காரணமாக திணைக்களத்திற்கு ஏற்பட்டிருந்த நட்டம் ரூபா 988,000 ஆகும்.
* அநுராதபுரம் புகையிரத ஓட்டப்பிரிவில் காணப்படும் ஒவ்வொரு இரயில் பஸ்ஸின் டீசல் நுகர்வினை முன்கூட்டியே மதிப்பிட்டு அதன் படி விலகல்களை இனங்கண்டு கொள்வதற்கேற்ற கட்டுப்பாட்டு முறையொன்றை அறிமுகப்படுத்தாமையால் ரூபா 341,494 பெறுமதி கொண்ட 4678 லீற்றர் எரிபொருள் நட்டம் ஏற்பட்டிருந்தது.
* ஈ.பீ.சீ.எஸ். ஓட்டப்பிரிவின் எரிபொருள் களஞ்சியத்தில் 2010 செப்தம்பர் 06 ஆந் திகதி தொடக்கம் 2011 ஜனவரி 11 ஆந் திகதி வரையான 4 மாத காலத்தில் அறிவிக்கப்பட்ட 10020 லீற்றர் எரிபொருள் இருப்பின் பெறுமதி ரூபா 712,482 ஆகும்.
* மாவட்டப் பொறியியலாளர் (வடக்கு) அலுவலகத்தில் 2010 ஜனவரி 01 தொடக்கம் 2010 நவம்பர் 30 ஆந் திகதி வரையான காலத்தில் அறிவிக்கப்பட்டிருந்த ரூபா 229,663 நட்டங்கள் தொடர்பில் அவற்றைத் தவிர்ப்பதற்கு பொருத்தமான பாதுகாப்பு வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.
* Safety Glasses (72”x48”x3/16) 500 அலகுகளைக் கொள்வனவு செய்வதற்கான விலைமனுக் கோரலின் போது குறைந்த விலைமனுவினை நிராகரித்திருந்தமை காரணமாக திணைக்களத்திற்கு ரூபா 1,022,285 நிதிசார் நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.
* G.I.Hook Bolls 13 1/2”x 3/8 என்ற விடயத்தினைக் கொள்வனவு செய்கையில் 3 சந்தர்ப்பங்களில் கேள்விகோரல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை காரணமாக திணைக்களத்திற்கு ரூபா 52,000 நிதிசார் நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

## 2.12 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

தேவைப்பாட்டின் மீதான பொருத்தமான ஆய்வின்றி கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் களஞ்சியங்களில் தீயணைக்கும் உபகரணங்கள் நீண்ட காலமாக வைக்கப்பட்டிருந்தமை, பழுதடைந்த தீயணைக்கும் உபகரணங்களிற்குப் பதிலாக ஒப்படைக்கப்பட்ட திகிதியிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் உத்தரவாதக் காலமொன்றினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை

எடுக்கப்படாதிருந்தமை மற்றும் களஞ்சியத்திற்குப் பொருட்களைப் பெற்றுக்கொள்கையில் நியமங்களுடன் அமைவுறாத பொருட்கள் பொறுப்பேற்கப்பட்டிருந்தமை என்பவற்றின் காரணமாக தனியார் நிறுவனமொன்றிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த 520 அலகுகுள் தீயணைக்கும் உபகரணங்களிற்காக செலவிடப்பட்ட ரூபா 2,478,221 பயனற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 2.13 செயற்பாட்டுச் செயற்திறனின்மை

இந்திய கடன் திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற கரையோர புகையிரத வீதி முறைமையின் அபிவிருத்திச் செயற்திட்டம் தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) கடுகதி திருப்பங்கள் மற்றும் வீதிகளின் அமைப்பினை கருத்திற் கொள்கையில் அபிவிருத்தி செய்யப்பட்ட காலி மாத்தறை வீதியின் ஓட்ட வேகத்தினை மணிக்கு 100 கி.மீ. அளவில் பேணிவருதல் கடினமான குறிக்கோள் என்பது தெளிவானதுடன் புதுப்பித்தலின் பின்னர் காணப்பட்ட தரத்தினைக் காட்டிலும் வேக அதிகரிப்பு 16 கி.மீ. ஆன குறைவான அளவிலேயே அதிகரித்திருந்தது.

(ii) புகையிர வீதியின் புதுப்பித்தலுடன் இணைந்ததாக பயணிகள் மேடைகளின் உயரத்தினை அதிகரிப்பதற்கான பணிகள் கணக்காய்வுத் திகதியான 2011 பெப்ரவரி வரை முடிவுறுத்தப்படாதிருந்ததுடன் 2 மீற்றர்களால் உயரத்தினை அதிகரிக்கையில் ஊணமுற்றோரிற்கும் பொதிகளின் இயக்க நடவடிக்கைகளிற்கும் பாதிப்புக்கள் ஏற்பட்டிருந்தமை மற்றும் இந் நிர்மாணங்கள் உயர்தர மட்டத்தில் இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 2.14 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) திணைக்களத்திற்குரிய கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடங்கியிருந்த கணக்காய்வுப் பந்திகள் பொதுக் கணக்குகள் குழுவினால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் எழுந்த விடயங்கள் தொடர்பில் பொதுக் கணக்குகள் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்களை நடைமுறைப்படுத்துவதில் தாமதப் போக்கொன்று காணப்பட்டது.

| கணக்காய்வு அறிக்கைக்கான தொடர்பு | கவனயீர்ப்பு விடயம் | பொதுக் கணக்குகள் குழுக்கூட்டத் திகதி | பொதுக் கணக்குகள் குழுவின் பரிந்துரை |
|---|---|---|---|
| 2005 ஆம் ஆண்டின் அறிக்கையின் 2.2.3(1) ஆம் பந்தி | மேலதிகநேரப் படி | 2007 ஏப்ரல் 09<br>2007 ஏப்ரல் 20 | மேலதிகநேரப் படி செலுத்துகையில் திறைசேரி அறிவுறுத்தல்களை கண்டிப்பாக பின்பற்றுதல், புகையிரத சாரதிகளின் பயிற்சிக் கால எல்லையினை குறைத்தல் மற்றும் ஏனைய வெற்றிடங்களை நிரப்புவதனை துரிதப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| புகையிரத அனுமதிப்பத்திரம் | 2008 நவம்பர் 10 | நிலுவையான புகையிரத அனுமதிப்பத்திர வருமானத்தினை அறவிட்டுக் கொள்வதற்கு திறைசேரியின் அறிவுறுத்தல்களை கண்டிப்பாக பின்பற்றுதல். |
| கொள்வனவுகள் தொடர்பான கேள்வி நடைமுறையினை துரிதப்படுத்தல் | 2008 நவம்பர் 10 | ஏற்படக்கூடிய தாமதங்களைக் குறைப்பதற்காக நிரந்தரமான கேள்விச் சபையொன்றினை நியமிப்பதற்கு அறிவுரை வழங்கப்பட்டிருந்த போதிலும் குறித்த தாமதங்கள் தற்போதும் அவதானிக்கப்பட்டதுடன் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்தல் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |

தெரிவுப் பரிசோதனைகளில் பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) திறைசேரியின் PF/FS/Funds/MA25/35 ஆம் இலக்க 2008 ஜனவரி 24 ஆந் திகதிய கடிதத்தின் படி திணைக்களத்தினால் பேணிவரப்படுகின்ற தண்டப்பண நிதியத்தினை மூடிவிட்டு எஞ்சியுள்ள பணத்தினை 20:03:90:00 ஆம் குறியீட்டு இலக்கம் கொண்ட ஏனைய பெறுவனவுகளின் கீழ் கணக்கு வைக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் 2008 நவம்பர் தொடக்கம் 2011 பெப்ரவரி வரை ஊழியர்களின் சம்பளத்திலிருந்து அறவிடப்பட்ட தண்டப்பணத் தொகையான ரூபா 1,010,741 தண்டப்பண நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) புகையிரதத் திணைக்களத்தின் களஞ்சிய உப திணைக்களத்தினால் கொள்வனவுகளை மேற்கொள்கையில் கொள்வனவுத் தேவைப்பாடு ஏற்பட்டது முதல் கொள்வனவு நடைமுறை வரைக்கும் மிக நீண்ட காலதாமதம் நிலவுகின்றமை (07 மாதங்கள் - 3 வருடங்கள் வரை) அவதானிக்கப்பட்டது.

(iii) புகையிரதத் திணைக்களத்தின் ஒழுக்காற்று நடவடிக்கைகளுடன் தொடர்புடைய ஒழுக்காற்றுப் பிரிவினால் பேணப்பட்டு வருகின்ற பதிவேட்டில் 2009 ஆம் ஆண்டிலிருந்து 2010 திசெம்பர் வரைக்கும் முறைப்பாடு செய்யப்பட்டிருந்த 712 ஒழுக்காற்று விடயங்கள் சம்பந்தமாக அந்த விடயங்களின் நடப்பு நிலவரங்களை வெளிப்படுத்தும் தகவல்கள் எதுவும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

797,125 கடன் மீதி சம்பந்தமாக அதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) வேலையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட 16 உத்தியோகத்தர்கள் தொடர்பான ரூபா 1,064,805 கடன் மீதியினை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சுச் செயலாளரின் 2008 திசெம்பர் 31 ஆந் திகதிய 30/2008 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் படி, இடர் கடனைச் செலுத்துகையில் உச்ச கடன் உரித்துத் தொகை ரூபா 250,000 ஆக காணப்பட வேண்டிய போதிலும் அவ்விதிக்கு முரணாக 07 உத்தியோகத்தர்களிற்கு ரூபா 1,286,089 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 3.4 செயலாற்றுகை

2010 இன் பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி திணைக்களத்தின் செயன்முன்னேற்றம் மீதான அவதானிப்புக்கள் வருமாறு

### போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்

திணைக்களத்தின் பிரதான பணிகள் போதியளவில் நிறைவேற்றப்படாதிருந்த சந்தர்ப்பங்களில் சில கீழே தரப்படுகின்றன.

(அ) மோட்டார் வாகனங்களைப் பதிவுசெய்கையில் மூலக் கோவையினை முறையாகப் பேணிவருதல் திணைக்களத்தின் பொறுப்பான போதிலும் அக்கோவைகளை முறையாக பேணிவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. வாகனங்களைப் பதிவு செய்கையில் அவற்றின் உரிமையாளர்களால் சமர்ப்பிக்கப்படுகின்ற சுங்கத் தீர்வை அட்டைகள், புதுப்பிக்கப்பட்ட வாகனம் எனின் வெளிநாட்டில் பதிவினை இரத்துச் செய்தமைக்கான சான்றுப்பத்திரம் போன்ற சான்றிதழ்கள் உள்ளடங்கிய மூலக் கோவை வருமான சேகரிப்பிற்கும் கணக்காய்விற்கும் மிக முக்கியமாக தேவைப்படுகின்றது. இருப்பினும் பதிவுகளை மேற்கொள்கையில் இடம்பெறுகின்ற பல்வேறு மோசடிகள் மற்றும் தவறுகள் வெளிப்படுத்தப்படுவதனை தவிர்ப்பதற்காக குறித்த கோவைகள் காணாமல் போயுள்ளதாக குறிப்பிட்டு கோவைகளை சமர்ப்பிக்காமையால் கணக்காய்விற்கு தடை ஏற்படுத்தப்பட்டிருந்தமை.

(ஆ) திணைக்களத்தினால் கோவைகளைப் பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தி வைக்கும் முறையொன்று பின்பற்றப்பட்டிராமை.

(இ) வாகனங்களின் உரிமை மாற்றமடைகையிலும் கைமாற்றம் செய்கையிலும் வாகனங்களின் உண்மையான உரிமையாளர்களை தேடிக் கண்டறிய முடியாமையால் பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டிருந்தமை மற்றும் அவ்வாறான கைமாற்றச் செயற்பாடுகளிற்காக நீண்ட காலதாமதம் ஏற்பட்டிருந்தமை. அதன்மூலம் பல்வேறு முறைகேடுகளிற்கும் இடமளித்திருந்தமை.

(ஈ) கோவைகளை உரிய முறையில் பேணி வராமையால் பதிவுசெய்தல் நடவடிக்கைகளிற்காக முழுமையாக கணனிமயமாக்கப்பட்ட தகவல்களின் மீது தங்கியிருக்க வேண்டிய நிலை திணைக்களத்திற்கு ஏற்பட்டிருந்தது. இதன் காரணமாக கணனிச் செயன்முறை சார்ந்த மோசடி நடவடிக்கைகள் ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகரித்திருந்தமை.

(உ) கணனித் தரவுகளை மாற்றியமைக்க முடியாத வழிமுறைகளை அறிமுகப்படுத்தி தரவுகளை மோசடியாக மாற்றியமைப்பதனை தடுக்கும் முறைகள் மற்றும்

தொழில்நுட்ப முறைகளை அறிமுகம் செய்வதற்கு திணைக்களம் இதுவரை நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கவில்லை.

## 3.5 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த ஒரு சில கொடுக்கல்வாங்கல்கள் முறையற்றுக் காணப்பட்டன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் வருமாறு.

**(அ) முறையற்ற விதத்தில் பதிவுசெய்யப்பட்ட வாகனங்களை தகுதியற்றவையாக பட்டியல்படுத்தல் மற்றும் அகற்றுதல்.**

2009 இன் 08 ஆம் இலக்க மோட்டார் வாகனங்கள் (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் படி திணைக்களத்தில் வாகனங்கள் தகுதியற்றவையாக பட்டியல்படுத்தியிருந்த மற்றும் தகுதியற்ற பட்டியலிலிருந்து அகற்றப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. இந் நடவடிக்கைகள் உதவி ஆணையாளர் ஒருவரின் கட்டுப்பாட்டின் கீழ் குறித்த பிரிவினால் உள்ளகக் கட்டுப்பாட்டுடன் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் நி.பி. 134 இற்கு முரணாக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் இரண்டு உத்தியோகத்தர்களிற்கு வாகனங்களின் இலக்கங்களையும் செஸி இலக்கங்களையும் ஏடுகளில் பதிவுசெய்தல் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

* ஏதேனுமோர் வாகனம் குறித்துரைக்கப்பட்ட காரணம் ஒன்றிற்காக தகுதியற்றதாக பட்டியல்படுத்தப்படுமாயின், அந்த வாகனத்தின் உரிமையாளரிற்கு, அந்த வாகனம் ஏதேனுமோர் குறித்துரைத்த காரணத்தின் மீது தகுதியற்றதாக பட்டியல்படுத்தப்பட்டுள்ளதாக கடிதம் மூலம் அறிவித்து வாகனத்தின் உரிமையாளரிற்கு விளக்கத்தினை சமர்ப்பிப்பதற்கு சந்தர்ப்பத்தினை வழங்கிய பின்னரே குறித்த வாகனத்தினை தகுதியற்றதாக பட்டியல்படுத்த வேண்டுமாயினும், திணைக்களத்தினால் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாது பக்கச்சார்பான விதத்தில் வாகனங்கள் தகுதியற்றவையாக பட்டியல் படுத்தப்பட்டிருந்தன.
* அவ்வாறு முறையான ஆய்ந்தறிதலின்றி முறைகேடான விதத்தில் 2010 ஆம் ஆண்டில் ஏறத்தாழ 2000 மோட்டார் வாகனங்கள் தகுதியற்ற பட்டியிலில் உள்ளடக்கப்பட்டும் அகற்றப்பட்டும் இருந்தன.
* உள்ளக கணக்காய்வுப் பிரிவு உத்தியோகத்தர்களின் பணிகளின் படி மோசடிகளையும் ஊழல்களையும் வெளிக்கொண்டுவருதல் வேண்டுமாயினும் இந்த இரண்டு உத்தியோகத்தர்களினாலும் கணக்காய்வு ஐயவினாக்களின் மூலமோ அல்லது வேரேதேனும் வழியினாலோ வெளிப்படுத்தப்பட்டதன் பின்னர் தகுதியற்றவையாக பட்டியல்படுத்தி ஒப்படைத்தல் இடைநிறுத்தப்பட்டிருந்த வாகனங்கள் மோசடியாக தகுதியற்ற வாகனங்களின் பட்டியலிலிருந்து அகற்றப்பட்டு ஒப்படைக்கப்பட்டிருந்தன. இருந்த போதிலும், திணைக்களத்தினால் இந்த நபர்களிற்கெதிராக விசாரணையொன்றை மேற்கொண்டு ஒழுக்க மீறல் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் தற்போதும் குறித்த பதவிகளில் பணிபுரிந்து வருகின்றமை அவதானிக்கப்பட்டது.

**(ஆ) கொள்வனவு வழிகாட்டல்கள் கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளிலிருந்து விலகிச்செயற்படல்**

வழங்கல் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக வழங்குனர்களிற்கு 24 மணிநேர கால அவகாசத்தினையேனும் வழங்காது ரூபா 14 மில்லியனிற்கும் கூடிய பெறுமதி கொண்ட "L" இலக்கத் தகடுகளை வழங்கல் செய்வதற்காக மட்டுப்படுத்திய விலைமனுக் கோரலை மேற்கொண்டு வழங்குனர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார்.

## 3.6 மோசடித் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்

மோட்டார் வாகனங்களை பதிவு செய்தலுடன் சம்பந்தப்பட்ட மோசடித் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள் மீதான அவதானிப்புக்கள் வருமாறு

(அ) புதிதாக வாகனங்களைப் பதிவுசெய்வதற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய சுங்கத்தீர்வை ஆவணங்களை மோசடியாகத் தயாரித்து மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்திற்குச் சமர்ப்பித்து மோட்டார் வாகனங்கள் பதிவுசெய்து கொள்ளப்பட்டிருந்தமை

(ஆ) உள்நாட்டிற்கு சட்ட விரோதமாக கொண்டுவரப்பட்ட அல்லது உதிரிப்பாகங்களை (அனுமதிப்பத்திரத்தின் கீழ்) இறக்குமதி செய்வதற்காக வழங்கப்பட்டுள்ள அனுமதியின் மீது மிகக் குறைந்த சுங்கக் கட்டணத்தினைச் செலுத்தி இந்நாட்டிற்கு எடுத்துவரப்பட்டிருந்த வாகனங்களிற்கு ஏற்கனவே திணைக்கத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள பழைய வாகனங்களின் செஸி இலக்கத்தினைப் மிகவும் சூட்சுமமாகப் பொறித்து புதிய வாகனங்களை பழைய பதிவு இலக்கங்களின் ஓட்டத்தில் விடுவதற்கு வசதிசெய்து கொடுக்கப்பட்டிருந்தமை.

(இ) வாகன பதிவு இலக்கங்களை விநியோகிக்கையில் ஆங்கில எழுத்துத் தொகுதியில் G, H மற்றும் J ஆகிய முதல் எழுத்துக்களுடன் தொடங்கும் குறிப்பிடத்தக்களவு எண்ணிக்கையான இலக்கங்கள் பல்வேறு காரணங்களிற்காகவும் தவிர்க்கப்பட்டிருந்ததுடன் அவ்வாறு தவிர்க்கப்பட்ட இலக்கங்களிற்காக போலியான ஆவணங்கள் மற்றும் கோவைகளைத் தயாரித்து அதன் பின்னர் மோசடியாகவும் சூட்சுமமாகவும் அதற்குரிய வாகனங்களின் செஸி இலக்கங்கள், என்ஜின் இலக்கம், வாகன வகை போன்ற அனைத்துத் தகவல்களையும் கணனியில் உள்ளடக்கி சட்டவிரோதமான கொண்டுவரப்பட்ட அவ்வாறான வாகனங்கள் பதிவுசெய்யப்பட்டிருந்தமை.

(ஈ) வெளி மாகாணங்களில் மோட்டர் சைக்கில்கள் என ஆங்கில எழுத்துத் தொகுதியில் G, H மற்றும் J ஆகிய முதல் எழுத்துக்களுடன் பதிவு செய்யப்பட்டிருந்த இலக்கங்களிற்குரிய விபரங்கள் கணனிமயப் படுத்தப்பட்டிராமையால் அக் கோவைகள் மற்றும் தகவல்களை அகற்றி அவ் இலக்கங்களிற்காக புதியரக ஜீப் வாகனங்களின் செஸி இலக்கங்கள், என்ஜின் இலக்கம், வாகன வகை போன்ற அனைத்துத் தகவல்களையும் கணனியில் உள்ளடக்கி புதியரக வாகனங்கள் மோசடியாக பதிவுசெய்யப்பட்டிருந்தமை.

(உ) மோசடியாக ஆவணங்களைத் தயாரித்து புதியரக வாகனங்கள் 325 என்ற இலக்கத் தொகுதியின் கீழ் பதிவுசெய்யப்பட்டிருந்தமை.

(ஊ) போலியாகத் தயாரிக்கப்பட்ட ஆவணங்களின் மீது வாகனங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தமையால் அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய பெருந்தொகை வருமானங்கள் இழப்பாகியிருந்தமை.

(எ) போலியாகத் தயாரிக்கப்பட்ட ஆவணங்களை திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கும் ஆட்களிற்கெதிராக சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு திணைக்களம் தவறியிருந்தமை.

(ஏ) போலியாகத் தயாரிக்கப்பட்ட ஆவணங்களை உள்ளடக்கி பதிவுசெய்யப்பட்டிருந்த வாகனங்களின் தொடக்கக் கோவைகள் திணைக்களத்திலிருந்து காணாமல் போயிருந்தமை.

## 3.7 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் வெற்றிடங்களும்

2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான பதவியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | பதவியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட தரம் | 29 | 20 | 09 | - |
| (ii) | மூன்றாம் தரம் | 17 | 10 | 07 | - |
| (iii) | இரண்டாம் தரம் | 596 | 528 | 68 | - |
| (iv) | ஆரம்பத் தரம் | 128 | 107 | 21 | - |
| (v) | ஏனையோர் (சமயாசமய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | - | 04 | - | 04 |
| | மொத்தம் | 770 | 669 | 105 | 04 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2000 ஜனவரி 17 ஆந் திகதிய வருடாந்த இடமாற்றத்தின் மீது மோட்டர் வாகன போக்குவரத்துத் திணைக்களத்திற்கு கடமைக்கு சமூகமளித்திருந்த அ.உ.சே. II உத்தியோகத்தர் ஒருவர் 2007 ஜனவரி 10 ஆந் திகதி தொடக்கம் மோட்டர் வாகன போக்குவரத்துத் திணைக்களத்திலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தார். இருப்பினும் இந்த உத்தியோகத்தர் 2010 திசெம்பர் வரைக்கும் திணைக்களத்தில் பணியாற்றி சட்டவிரோதமாக திணைக்களத்திலிருந்து சம்பளம் செலுத்துவதற்கும் அந்த உத்தியோகத்தரை தொடர்ந்தும் திணைக்களத்தில் வைத்துக் கொள்வதற்கும் உயர்மட்ட முகாமைத்துவம் நடவடிக்கை மேற்கொண்டிருந்தது.

(ஆ) திணைக்களத்தில் சிறந்த ஆளணி முகாமைத்துவம் காணப்படாமை, திணைக்கள உத்தியோகத்தர்களின் உள்ளக சேவை நிலைய இடமாற்றங்கள் செயற்படுத்தப்படாமை காரணமாக ஒரு சில பிரிவுகளின் ஊழியர்கள் பல வருடங்களாக ஒரே பிரிவில் சேவையாற்றி வருகின்றமையால் பல்வேறு